2003 மார்ச் 27]

திரு. ஏ.எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடத்தைப் பொறுத்தவரையிலும், அந்தப் பகுதியிலே நிறைய நிலம் இருக்கிறது. அதில் பிரச்சினை எழுமானால், நிச்சயம் அங்கே இருக்கிற அதிகாரிகளைக் கலந்தாலோசித்து, அமைச்சரவர்கள் கூறுகின்ற வகையில் நாங்கள் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தகுந்த ஒத்துழைப்பைத் தருவதாகச் சொன்னார்கள். அவர்கள் பொன்னேரி வட்டத்திலே வேறு ஏதாவது ஒரு நிலத்தை, அரசு நிலத்தைக் காட்டினால்கூட, அந்த நிலத்திலே கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 105, திரு. பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

105—

கும்பாபிஷேகம்

***18999—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியத்திலுள்ள திருவற்றிபுரம் ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பித்து, கும்பாபிஷேகம் நடத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு நிதி மற்றும் பொது மக்கள் நன்கொடை ஆகியவை மூலம் திருக்குடமுழுக்குச் செய்திட ஆரம்ப கட்ட நடவடிக்கை செயல்

அலுவலரால் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10

திரு. பி.எஸ். உலகரட்சகன்: கண்ணியமிக்க சபையை மிகக் கண்ணியமாக நடத்திக் கொண்டிருக்கும் கனம் பொருந்திய சபாநாயகர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, இவ்வளவு முன்னுரை? (சிரிப்பு)

திரு. பி.எஸ். உலகரட்சகன்: இந்தத் திருக்கோயில், திருவண்ணாமலை மாவட்டத்திலே அருணாசலேஸ்வரர் கோயிலுக்கு அடுத்தபடியாக இரண்டாவதாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஈஸ்வரன் கோயில் மிகவும் புகழ்பெற்ற ஒன்றாகும். 63 நாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் இந்த ஸ்தலத்திற்கே வந்து பாடி, காய்க்காத ஒரு பனை மரமே காய்த்துக் கொண்டிருக்கிறது. மகப்பேறு இல்லாதவர்களெல்லாம் இந்தத் திருக்கோயிலுக்கு வந்து பலனை அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, எல்லாக் கோயில்களிலும் நந்தி மேற்கே பார்த்து இருந்தால், இந்தக் கோயிலிலே நந்தி கிழக்கே பார்த்து இருக்கும் ஒரு வித்தியாசமான திருக்கோயில். இந்தக் கோயிலுக்கு அரசாங்கத்தினுடைய நிதி என்னமோ ஒரு இலட்சம் ரூபாய்தான். இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக ரூ.50 ஆயிரம். மீதி ரூ.3.50 இலட்சத்தை மக்களிடமிருந்து வசூல் செய்து ரூ. 5 இலட்சத்திலே இந்தத் திருக்கோயில் திருப்பணி நடைபெற வேண்டுமென்று அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே இது போதாது. மேலும் இந்தத் திருக்கோயிலுக்கு 10 இலட்சம் ரூபாயை வழங்கி, இந்தத் திருக்கோயிலின் கும்பாபிஷேகம் சீரும், சிறப்புமாக நடைபெறுவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்று தங்களின் தமிழ் வாயால் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உலகரட்சகன், உங்களுக்குத்தான் வாய்ப்புக் கொடுக்கிறேனே, அப்புறம் எதற்கு?(சிரிப்பு)

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயில் திருஞானசம்பந்தர் அவர்களால் பாடல் பெற்ற ஸ்தலம் என்பதால் 30% அல்லது 5 இலட்சம் ரூபாய் அரசின் நிதி பெற்றுத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட பாடல் பெற்ற

2003 மார்ச் 27]

திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திருவற்றிபுரம் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில் என அழைக்கப்படும் அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகைக்குட்பட்ட சட்டப் பிரிவு 46(1)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். இத் திருக்கோயில், நிலை-4 செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தற்போது அறங்காவலர் குழுப் பதவிக் காலம் முடிவடைந்துள்ளதால் செய்யாறு ஆய்வர் தக்காராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இத் திருக்கோயிலில் முன்னதாக 19-6-1977 அன்று திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. மேற்படி திருக்கோயிலின் மேல்தளம், இராஜகோபுரம், அனைத்து விமானங்கள், திருக்குளம், நூற்றுக்கால் மண்டபம் ஆகியவற்றை அரசு நிதி மற்றும் பொது மக்கள் நன்கொடை என்ற நிதி ஆதாரத்தில் சீரமைத்து, 2003 ஆம் ஆண்டுக்குள் திருக்குடமுழுக்குச் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத் திருக்கோயிலின் திருப்பணிக்காக முதலில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதி தற்சமயம் வழங்கப்பட்டுள்ளது. பாடல் பெற்ற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் இப்பணிகள் அங்கிருக்கிற பக்தர்கள் மூலமாகவும், மற்றுமுள்ள ஆன்மீகத்தில் பற்றுள்ளவர்கள் மூலமும் வசூல் செய்து தாங்கள் முன்னின்று இதை 5 இலட்சம் ரூபாயில் செய்வதற்கு, அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

106—

மருத்துவமனை விரிவாக்கம்

***443—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, பெரியார் நகர் புறநகர் மருத்துவமனையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?